செய்தி வெளியீடு

செ.வெ.எண். 11 நாள்:07.02.2017

# பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நோய் தடுப்பு மற்றும் தூய்மை இந்தியா விழிப்புணர்வு தெருக்கூத்து நாடகங்கள் நடத்தப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பாக தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் நோய் தடுப்பு முறைகள் மற்றும் முழு சுகாதார தமிழகத்தை உருவாக்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி முழுவதும் தெருக்கூத்து நாடகங்கள் நடத்தப்படுகிறது.

தெருக்கூத்து என்பது தமிழ்நாட்டின் ஒரு பாரம்பரிய கலையாகும். முத்தமிழ் என்று அழைக்கப்படும் இயல், இசை மற்றும் நாடகம் ஆகிய மூன்றையும் இணைத்து உருவானது தான் தெருக்கூத்தாகும். நடனமாடுதல், நடித்தல், உரக்க வாசித்தல், வரிசையாக எடுத்துரைத்தல், மரபு வழி சொற்றொடர்கள் மற்றும் பாடல்கள் போன்றவைகள் மூலமாக பொதுமக்களின் மனதில் நோய் தடுப்பு சம்பந்தமாக நல்ல மாற்றத்தை உருவாக்க முடியும். இத்தெருக்கூத்தின் மூலம் சொல்லப்படும் நல்ல கருத்துகள் காண்பவர்களுக்கு மனதில் நீண்ட காலம் நிலைத்து நிற்க கூடிய சக்தி வாய்ந்ததாகும்.

இந்த நாடகங்கள் 06.02.2017 அன்று முதல் தொடங்கி மாலை நேரங்களில் ஒரு நாளைக்கு 10 நாடகங்கள் வீதம் மொத்தம் 200 நாடகங்கள், தொடர்ந்து 20 நாட்களுக்கு நடத்தப்படுகிறது. இந்நாடகங்கள் குடிசைப்பகுதிகள், வணிக வளாகங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் மேற்கொள்ளப்படும்.

இந்நிகழ்ச்சியில் டெங்கு மற்றும் பன்றிக்காய்ச்சல் போன்றவைகள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றை தடுக்கும் முறைகள் மற்றும் முழு சுகாதார தமிழகத்தை உருவாக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் முதலியன குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**